RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 202 | ஜூலை.25 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## கீழடி அறிக்கை நிலை என்ன? நாடாளுமன்றத்தில் மத்திய அமைச்சர் விளக்கம்



புதுடெல்லி: ஜூலை.25-

கீழடி அகழாய்வின் துல்லியமான கண்டுபிடிப்புகளை வெளியிடுவதில் உலகளாவிய அறிவியல் நடைமுறைகளை பின்பற்ற இந்திய தொல்லியல் துறை உறுதி பூண்டுள்ளதாக மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற மாநிலங்களவையில் இன்று திமுக உறுப்பினர் திருச்சி சிவா எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியது: "கீழடி அகழாய்வுக்கு தலைமை ஏற்ற தொல்பொருள் ஆய்வாளரின் அறிக்கை நிபுணர்களால் சரிபார்க்கப்பட்டது. அவரது ஒப்புதலுடன் நிபுணர்களின் முடிவுகளையும் இணைத்து அதிகாரப்பூர்வ அறிக்கையை இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை வெளியிட்டுள்ளது. கீழடி அகழாய்வின் தலைமை ஆய்வாளர் அறிக்கை ஆய்வு செய்யப்பட்டு நிபுணர்களின் கருத்துகள் அவருடன் பகிர்ந்துகொள்ளப்பட்டது.

வைகை நதிப்படுகையில் உள்ள கீழடியில் தொல்பொருள் ஆய்வுக்கான இடங்களை தென்னிந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை கண்டறிந்தது. இதையடுத்து முக்கியமான இடங்களில் மாநில தொல்பொருள் ஆய்வுத் துறை மற்றும் கல்வி நிறுவனங்களால் 2014-15, 2015-16, 2016-17 ஆகிய ஆண்டுகளில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த அகழாய்வு தொடர்பான அறிக்கையை அளிக்குமாறு சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளை 2024 பிப்ரவரி 29 அன்று உத்தரவிட்டதை அடுத்து, நடைமுறையில் உள்ள விதிகளின்படி தலைசிறந்த நிபுணர்களால் சரிபார்க்கப்பட்டு அறிக்கை ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது" என்று அவர் தெரிவித்தார்.

# குரூப்4 தேர்வு முறைகேடு வழக்கு சிபிஐக்கு மாற்றம்

## உயர் நீதிமன்றத்தில் டிஎன்பிஎஸ்சி தகவல்



மதுரை: ஜூலை.25-

தமிழகத்தில் 2019ல் நடைபெற்ற குரூப்4 தேர்வில் நடந்த முறைகேடு தொடர்பான வழக்கு சிபிஐக்கு மாற்றப்பட்டுள்ளது என உயர் நீதிமன்றத்தில் டிஎன்பிஎஸ்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மதுரை மேலூர் எட்டிமங்கலத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் பி.ஸ்டாலின், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் 2020ல் தாக்கல் செய்த பொதுநல மனுவில், 'தமிழகத்தில் 2019ம் ஆண்டில் டிஎன்பிஎஸ்சி நடத்திய குரூப்4 தேர்வை மாநிலம் முழுவதும் 5,574 மையங்களில் 16 லட்சம் பேர் எழுதினர். இந்த தேர்வில் ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம், கீழக்கரை மையங்களில் தேர்வு எழுதியவர்கள் முதல் நூறு இடங்களில் வெற்றி பெற்றனர். இது குறித்து விசாரித்தபோது தேர்வில் முறைகேடு நடந்தது தெரியவந்தது.

முறைகேடு தொடர்பாக டிஎன்பிஎஸ்சி அளித்த புகாரின் பேரில் சிபிசிஐடி போலீஸார் வழக்கு பதிவு செய்து பலரை கைது செய்தனர். முறைகேடு செய்து வெற்றி பெற்றதாக 99 பேர் வாழ்நாள் தகுதியிழப்பு செய்யப்பட்டனர். இந்த வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள் கீழ்நிலை அதிகாரிகள், விண்ணப்பதாரர்கள், புரோக்கர்கள், பார்சல் சர்வீஸ் ஓட்டுனர்கள், காவலர்கள் மட்டுமே. உயர் அதிகாரிகள் யாரும் வழக்கில் சேர்க்கப்படவில்லை.

உயர் அதிகாரிகள் ஆதரவு இல்லாமல் இந்த மோசடி நடைபெற்றிருக்காது. இதேபோல் டிஎன்பிஎஸ்சி 2016ல் நடத்திய குரூப் 1 தேர்விலும் முறைகேடு நடைபெற்றுள்ளது. இந்த தேர்வில் முறைகேடு செய்து வெற்றி பெற்ற பலர் காவல் துறை மற்றும் நிர்வாகத் துறையில் உயர் பொறுப்புகளில் உள்ளனர். தமிழகத்தில் லட்சக்கணக்கான இளைஞர்கள் அரசு வேலைக்கு டிஎன்பிஎஸ்சியை நம்பியுள்ளனர். அரசு வேலைக்கு செல்ல கடுமையாக படித்து வருகின்றனர். அப்படியிருக்கும்போது டிஎன்பிஎஸ்சி தேர்வில் முறைகேடு செய்து வெற்றி பெறுவது அரசு வேலைக்காக கடுமையாக முயன்று வரும் இளைஞர்களுக்கு இழப்பை ஏற்படுத்தும்.

இதனால் எதிர்காலத்தில் முறைகேடு நடைபெறாமல் தடுக்க கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். டிஎன்பிஎஸ்சி முறைகேடுகளில் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு தொடர்பு உள்ளது. இதனால் சிபிசிஐடி விசாரித்தால் நியாயம் கிடைக்காது. எனவே டிஎன்பிஎஸ்சி முறைகேடு வழக்குகளை சிபிஐ விசாரணைக்கு மாற்றியும், எதிர்காலத்தில் டிஎன்பிஎஸ்சி தேர்வுகளில் முறைகேடுகள் நடைபெறாமல் தடுக்க மாநிலம் முழுவதும் யூபிஎஸ்சி, டிஎன்பிஎஸ்சி பயிற்சி மையங்களை கண்காணிக்க குழு அமைக்க உத்தரவிட வேண்டும்' என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், ஏ.டி.மரியகிளாட் அமர்வில் விசாரணைக்கு வந்தது. டிஎன்பிஎஸ்சி வழக்கறிஞர் வாதிடுகையில், மனுதாரரின் கோரிக்கை ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றம் 14.12.2021ல் பிறப்பித்த உத்தரவுபடி டிஎன்பிஎஸ் தேர்வு முறைகேடு வழக்கு சிபிஐக்கு மாற்றப்பட்டுள்ளது என்றார். இதையடுத்து நீதிபதிகள், மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதால் இந்த மனு மீது வேறு உத்தரவு பிறப்பிக்கவேண்டிய தேவையில்லை. மனு முடிக்கப்படுகிறது என உத்தரவிட்டனர்.




## "தப்பிக்க முடியும் என்று நினைக்காதீர்கள்" தேர்தல் ஆணையத்துக்கு ராகுல் காந்தி எச்சரிக்கை

புதுடெல்லி: ஜூலை.25-

"முறைகேடுகளைச் செய்துவிட்டு தப்பித்துவிட முடியும் என தேர்தல் ஆணையம் நினைத்தால் அது நடக்காது. ஜனநாயகத்தையும் அரசியலமைப்பையும் அழிக்க முயற்சிப்பவர்கள் அதற்குரிய தண்டனையை நிச்சயம் பெறுவார்கள்." என்று ராகுல் காந்தி எச்சரித்துள்ளார்.

இந்திய தேர்தல் ஆணையம் பிஹாரில் மேற்கொண்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடாளுமன்ற வளாகத்தில் காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில், பிரியங்கா காந்தி, கே.சி. வேணுகோபால், மக்களவை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கவுரவ் கோகாய், சிவ சேனா (உத்தவ் பிரிவு) எம்பி பிரியங்கா சதுர்வேதி, ராஷ்ட்ரிய ஜனதா தளம் எம்பி மனோஜ் ஜா, திமுக எம்பி ஆ ராசா, சமாஜ்வாதி கட்சி எம்பி ஜியாவுர் ரகுமான் பார்க், திரிணமூல் காங்கிரஸ் எம்பி கீர்த்தி ஆசாத் உள்ளிட்ட இண்டியா கூட்டணியைச் சேர்ந்த ஏராளமான எம்பிக்கள் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது, பிஹாரில் இந்திய தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வரும் சிறப்பு தீவிர ஆய்வு (எஸ்ஐஆர்) என்ற பெயரிலான வாக்காளர் பட்டியல் திருத்தத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும், தேர்தல் ஆணையத்தின் இந்த நடவடிக்கை 'ஜனநாயகத்தின் மீதான தாக்குதல்' என்றும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.


இந்த விவகாரம் தொடர்பாக முழு அளவில் விவாதம் நடத்த வலியுறுத்தி மக்களவையில் எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டனர். இதனால், அவை முதலில் 2 மணி வரையும் பின்னர் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

இதையடுத்து, நாடாளுமன்றத்துக்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, "தேர்தல் ஆணையத்துக்கு ஒரு செய்தியை சொல்ல விரும்புகிறேன். நீங்கள் தப்பிக்கப் போகிறீர்கள் என்று நினைத்தால், உங்கள் அலுவலர்கள் தப்பிக்கப் போகிறார்கள் என்று நினைத்தால், நீங்கள் தவறாக நினைக்கிறீர்கள். நாங்கள் உங்களைத் தேடி வருவோம்.

கர்நாடகாவின் ஒரு தொகுதியில் இந்திய தேர்தல் ஆணையம் மோசடியை அனுமதித்ததற்கு 100% ஆதாரம் உள்ளது. அதனை நாங்கள் உங்களுக்கு காண்பிக்கும்போது, அதற்கான ஆதாரம் 100% இருக்கும். நாங்கள் ஒரு தொகுதியை மட்டுமே கவனித்தோம். அதில் இந்த மோசடியை கண்டுபிடித்தோம். வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர்கள் நீக்கப்பட்டதிலும் சேர்க்கப்பட்டதிலும் முறைகேடுகள் நடந்துள்ளன. இதனை 100% நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. ஒரு குறிப்பிட்ட தொகுதியில் 50, 60, 65 வயதுள்ள ஆயிரக்கணக்கான வாக்காளர்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். 18 வயதுக்கு மேற்பட்ட தகுதி உள்ள வாக்காளர்களின் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

தேர்தல் ஆணையத்துக்கு எதிரான ஆதாரங்களை நாங்கள் வெளிச்சத்திற்குக் கொண்டுவருவோம், அதன் விளைவுகளிலிருந்து நீங்கள் (தேர்தல் ஆணையம்) தப்பிக்க முடியாது. ஜனநாயகத்தையும் அரசியலமைப்பையும் அழிக்க முயற்சிப்பவர்கள் அதற்குரிய தண்டனையை நிச்சயம் பெறுவார்கள்." என தெரிவித்துள்ளார்.

## இங்கிலாந்துக்கு இனி 95% வேளாண் பொருட்களை வரியின்றி ஏற்றுமதி செய்யலாம்: பியூஷ் கோயல்



புதுடெல்லி: ஜூலை.25-

95% இந்திய வேளாண் பொருட்களும், 99% இந்திய கடல்சார் உணவுப் பொருட்களும் வரி இன்றி இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பை இந்தியா இங்கிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் வழிவகை செய்கிறது என்று மத்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இந்தியா இங்கிலாந்து இடையே விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தம் (சிஜிஜிகி) என்ற பெயரிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானதை அடுத்து, இதனால் இந்தியாவுக்கு கிடைக்கும் நன்மைகள் குறித்து பியூஷ் கோயல் அறிக்கை வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பதிவில், "இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதற்காக பிரதமர் நரேந்திர மோடி, இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் மற்றும் இந்திய இங்கிலாந்து மக்கள் ஆகியோருக்கு வாழ்த்துக்கள்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், இந்திய ஏற்றுமதிகளில் சுமார் 99% வரி இல்லாமல இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. மேலும், உழைப்பு மிகுந்த இந்திய துறைகளுக்கு கிட்டத்தட்ட 23 பில்லியன் டாலர் மதிப்புக்கு வாய்ப்புகளை இது வழங்குகிறது. உள்ளடக்கிய மற்றும் பாலின சமத்துவ வளர்ச்சிக்கான புதிய சகாப்தத்தை இந்த ஒப்பந்தம் குறிக்கிறது.

ஜவுளி, தோல், காலணிகள், ரத்தினங்கள், நகைகள், பொம்மைகள், கடல் பொருட்கள் சார்ந்த சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் கைவினைஞர்கள், நெசவாளர்கள், தினசரி கூலித் தொழிலாளர்கள் போன்றோர் செழிப்பின் புதிய கட்டத்துக்குள் அடியெடுத்து வைப்பார்கள். கிராமப்புற தறிகள் முதல் தொழில்நுட்ப ஆய்வகங்கள் வரையிலான தொழில்களுக்கு நிதி உதவி கிடைப்பதும், உலகளாவிய மதிப்புச் சங்கிலிகளில் ஆழமாக ஒருங்கிணைவதற்குமான வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்புகளை இந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் வழங்கும்.

இந்த ஒப்பந்தம் விவசாயிகளுக்கு ஒரு பெரிய வெற்றியாகும். கிட்டத்தட்ட 95% வேளாண் பொருட்களை வரி இல்லாமல் ஏற்றுமதி செய்வதை இது உறுதி செய்கிறது. அதேபோல், மீனவர்கள் 99% கடல்சார் உணவுப் பொருட்களை வரி இல்லாமல் ஏற்றுமதி செய்ய முடியும் என்பதால், அவர்களும் இனி அதிக லாபத்தைப் பெறுவார்கள். இதனால் அவர்களின் வருமானம் அதிகரிக்கிறது.

இந்த ஒப்பந்தம் பொறியியல் உபகரணங்கள், மின்னணுப் பொருட்கள், மருந்து, ரசாயனங்கள், உணவு பதப்படுத்துதல் மற்றும் பிளாஸ்டிக் போன்ற உற்பத்தி சார்ந்த துறைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தும். இந்த ஒப்பந்தம் இந்திய நுகர்வோருக்கு போட்டி விலையில் உயர்தர பொருட்களை வழங்கும்.

தகவல் தொழில்நுட்பம், சேவைகள் மற்றும் கல்வி ஆகியவற்றில் இங்கிலாந்தின் உயர் மதிப்புள்ள சந்தைகளை இனி இந்தியர்கள் எளிதாக அணுகி பயனடைய முடியும். சமையல் கலைஞர்கள், யோகா பயிற்றுனர்கள், இசைக்கலைஞர்கள் மற்றும் வணிகர்கள் ஆகியோர் பயனடைவார்கள்.

இந்திய ஸ்டார்ட்அப் நிறுவனங்கள், பிரிட்டன் முதலீட்டாளர்களின் முதலீடுகளை ஈர்ப்பதற்கு இந்தியா பிரிட்டன் இடையேயான இந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் வழிவகுக்கும். இது அவர்களின் உலகளாவிய தடத்தை விரிவுபடுத்த உதவும். இந்த ஒப்பந்தம் 'மேக் இன் இந்தியா' மற்றும் 'வோகல் ஃபார் லோக்கல்' ஆகியவற்றுக்கு ஒரு பெரிய வெற்றியாக அமையும்.

அதிக வேலை வாய்ப்புகள் உருவாக்கத்தை இந்த ஒப்பந்தம் ஊக்குவிக்கிறது, இதன்மூலம் சமூகங்களை மேம்படுத்துகிறது. அதோடு, இந்தியாவின் ஆழமான வர்த்தக தலைமை முயற்சியை வலுப்படுத்துகிறது. இது பொருளாதார ஒத்துழைப்பின் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்துகிறது. நமது இருதரப்பு வர்த்தக உறவுகளை மீண்டும் புதுப்பிக்கிறது" என தெரிவித்துள்ளார்.

## முதல்வர் ஸ்டாலினுக்கு ஆஞ்சியோகிராம் பரிசோதனை: அப்போலோ மருத்துவமனை தகவல்

சென்னை: ஜூலை.25-

"முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நேற்று (வியாழக்கிழமை) ஆஞ்சியோகிராம் பரிசோதனை செய்யப்பட்டது. முடிவுகள் இயல்பாக உள்ளன. அவர் இரண்டு நாட்களில் வழக்கமான பணிகளை மேற்கொள்வார்." என்று அப்போலோ மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உடல் நலக்குறைவு காரணமாக, சென்னை அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். மருத்துவமனையில் இருந்து கொண்டு, மக்கள் நலத்திட்டங்கள் தொடர்பாக அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில், இன்னும் 2 அல்லது 3 நாட்களில் அவர் வீடு திரும்புவார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனிடையே அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் முதல்வர் மு.க.ஸ்டாலினை, அமைச்சர் துரைமுருகன் இன்று நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

முதல்வர் உடல்நிலை குறித்து அப்போலோ மருத்துவமனை நிர்வாகம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "முதல்வர் ஸ்டாலினுக்கு ஏற்பட்ட தலைசுற்றல் பிரச்சினை தொடர்பாக க்ரீம்ஸ் சாலையில் உள்ள அப்போலோ மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மருத்துவப் பரிசோதனைகளில், இதயத்துடிப்பில் உள்ள சில வேறுபாடுகள் காரணமாகவே இந்த தலைசுற்றல் ஏற்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டது.

இதய சிகிச்சை மருத்வர் நி.செங்குட்டுவேலு தலைமையிலான மருத்துவ வல்லுநர் குழுவின் அறிவுரையின்படி, இதனை சரி செய்வதற்கான சிகிச்சைமுறை அப்போலோ மருத்துவமனையில் இன்று காலை செய்யப்பட்டது. இன்று மேற்கொள்ளப்பட்ட ஆஞ்சியோகிராம் சோதனையும் இயல்பாக இருந்தது. முதல்வர் ஸ்டாலின் நலமாக உள்ளார். தனது வழக்கமான பணிகளை இரண்டு நாட்களில் மேற்கொள்வார்கள்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





### கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில்,

# வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பராமரிப்பு குறித்த மாவட்ட அளவிலான முகாமினை தொடங்கி வைத்து, மொத்தம் ரூ.61.06 இலட்சம் மதிப்பீட்டில் மானிய விலையிலான வேளாண் இயந்திரங்களை 23 விவசாயிகளுக்கு வழங்கினார்

சிவகங்கை, ஜூலை.25-

கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள், சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாக சமுதாயக்கூடத்தில் வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பராமரிப்பு குறித்த மாவட்ட அளவிலான முகாமினை தொடங்கி வைத்து, வேளாண் இயந்திரங்களை விவசாயிகளுக்கு வழங்கி தெரிவிக்கையில்,

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு விவசாயிகளின் நலன் காக்கப்பட்டு வந்தது. அச்சமயம் கடந்த 2006 ஆம் ஆண்டுகளில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் சுமார் ரூ.7,000 கோடி விவசாய கடன் தள்ளுபடி செய்யப்பட்டு, அத்திட்டம் ஒன்றிய அரசிற்கும் மாதிரியாக திகழப்பட்டது குறிப்பிடதக்கதாகும். அவ்வழியில் விவசாய பெருங்குடி மக்களின் நலன் காக்கின்ற வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 2021ல் ஆட்சி பொறுப் பேற்றவுடன் ரூ.12,000 கோடி விவசாய கடன் தள்ளுபடி செய்தார்கள்.

மேலும், விவசாய தொழிலினை மேலை நாடுகளுக்கு இணையான நவீன தொழில்நுட்பங்களுடன் செயல்படுத்துவதற்கு ஏதுவாக விவசாயிகளுக்கான எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தி விவசாயிகளின் உற்ற தோழனாக திகழ்ந்து வருகிறார்கள்.

இதுபோன்று, வேளாண்மைத்துறை, தோட்டக்கலை (ம) மலைப்பயிர்கள் துறை, வேளாண் பொறியியல் துறை போன்ற துறைகள் வாயிலாகவும் பல்வேறு திட்டங்கள் விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில், தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு பிற மாநிலங்களை ஒப்பிடுகையில், தமிழகம் தன்னிறைவு பெற்ற மாநிலமாக தமிழகம் உருவெடுத்துள்ளது. விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களை பாதுகாக் கின்ற வகையிலான திட்டங்களை தமிழகம் முழுவதும் செயல்படுத்துவதற்கு ஏதுவாக, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை என அறிவித்து, வேளாண்மை துறைக்கென தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்ததும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு தான் என்பது குறிப்பிடதக்கதாகும்.

மேலும், இன்றையதினம் வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு முறைகள் குறித்து, விவசாயிகள் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக, வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பராமரிப்பு குறித்த மாவட்ட அளவிலான முகாமானது சிறப்பாக நடைபெற்று வருகிறது. இம்முகாமில், தனியார் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் தயாரிப்பு நிறுவனங்களின் பொறியாளர்கள் மற்றும் வேளாண்மை பொறியியல் துறையை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டுள்ளனர். இம்முகாமில், நானும் விவசாயி என்ற முறையில் கலந்து கொண்டதில், பெருமிதம் கொள்கிறேன்.

வேளாண் இயந்திர உரிமையாளர்கள் மற்றும் விவசாயிகள், பொறியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் இம்முகாமில், காட்சிபடுத்தப்பட்டுள்ள புதிய மற்றும் நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் அதன் முக்கியத்துவம், பயன்பாடு, பராமரிப்பு குறித்து விளக்கம் அளித்தனர். எனவே, வேளாண் இயந்திர உரிமையாளர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோர் துறை சார்ந்த அலுவலர்களுடன் நேரில் கலந்துரையாடி தங்களது சந்தேகங்களை தெளிவு செய்து கொள்வதற்கும் இம்முகாம் அடிப்படையாக அமைந்துள்ளது. விவசாயிகள் இம்முகாமினை பயன்படுத்தி கொண்டு, விவசாயத்திற்கென பயன்படுத்தப்படும் நவீன இயந்திரங்களின் இயக்கம் மற்றும் பராமரிப்பு குறித்து அறிந்து கொண்டு பயன்பெற வேண்டும். அதுமட்டுமன்றி, விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களை விவசாயிகள் முழுமையாக அறிந்து கொண்டு, அத்திட்டத்தின் பயன்களை பெறுவதற்கான துறை சார்ந்த அலுவலர்களை முறையாக அணுகி, விவரங்கள் பெற்று பயன்பெற வேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

மேலும், இம்முகாமில் கூட்டுறவுத்துறையின் சார்பில் வேளாண்மை இயந்திரம யமாக்கல் துணை இயக்க திட்டத் தின் கீழ் கல்லல் வட்டாரத்திற்குட்பட்ட கூத்தலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் மானா மதுரை வட்டாரத்திற்குட்பட்ட இடைக்காட்டூர் தொடக்க வே ளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் ஆகியவைகளைச் சார்ந்த 5 உறுப்பினர்களுக்கு 70 சதவீதம் மானியத்தில்,

மொத்தம் ரூ.24,05,850/ மதிப்பீட்டிலான டிராக்டர், ரொட்டவேட்டர் மற்றும் 5 வரிசை கொத்து கலப்பை ஆகியவைகளையும், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் வேளாண்மை இயந்திரமயமாக்கல் துணை இயக்க திட்டத்தின் கீழ் சிவகங்கை, சிங்கம்புணரி, காளையார்கோவில், இளையான்குடி, கல்லல், மானாமதுரை ஆகிய வட்டாரங்களைச் சார்ந்த 18 விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியத்தில் மொத்தம் ரூ.36,99,810/ மதிப்பீட்டிலான வைக்கோல் கட்டும் இயந்திரம், நெல் நடவும் இயந்திரம், பவர் வீடர், பலர் டில்லர் ஆகியவைகளையும் என ஆக மொத்தம் ரூ.61,05,660/ மதிப்பீட்டிலான வேளாண் இயந்திரங்களை விவசாயிகளுக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) திரு. சு.சுந்தரமகாலிங்கம், இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) திரு.கோ.ராஜேந்திர பிரசாத், செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியியல் துறை) திரு.சுப்பிரமணியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) தனலட்சுமி, துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) திருமதி மு.சத்யா, உதவி செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியியல் துறை) செல்வராஜ் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள், விவசாய பெருங்குடி மக்கள் பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாநகராட்சி மண்டலம் 1 (வார்டு 8, 11) மாநகராட்சி (கிழக்கு) அலுவலகம் சர்வேயர் காலனியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறுவதை மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி பார்வையிட்டார் அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே. பிரவீன்குமார்,இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன்,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் துணை ஆணையாளர் திரு. ஜெய்னுலாபுதீன் ஆகியோர் உடன் உள்ளனர்.



■ மாநில சிறுபான்மையினர் ஆணைய தலைவர் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் மாவட்ட சிறுபான்மையினர் பிரதிநிதிகள் பல்வேறு அரசுத் துறை அலுவலர்களுடான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்ற புகைப்படம்.

### வேலைநாடும் இளைஞர்கள் பயன்பெறும் வகையில்,

## வருகின்ற 26.7.2025 அன்று, சிவகங்கை அரசு மகளிர் கலைக்கல்லூரியில் மாபெரும் தனியார்துறை சிறப்பு வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.25-

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் சார்பாக ஒவ்வொரு ஆண்டும் மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. சிவகங்கை மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக/நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்துடன் இணைந்து மாபெரும் தனியார்துறை சிறப்பு வேலைவாய்ப்பு முகாம் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டு, வருகின்ற 26.7.2025 அன்று சிவகங்கை, அரசு மகளிர் கலைக்கல்லூரியில் காலை 09.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை நடைபெறவுள்ளது.

இத்தனியார்துறை வேலை வாய்ப்பு முகாமில் 100க்கும் மேற்பட்ட தனியார்துறை நிறுவனங்கள் கலந்து கொண்டு, 3,000க்கும் மேற்பட்ட காலிப்பணியிடங்களுக்கு இளைஞர்களை தேர்வு செய்யவுள்ளனர். இத்தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் 8ஆம் வகுப்பு முதல் பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு, பட்டப்படிப்பு, டிப்ளமோ, ஐடிஐ போன்ற கல்வித் தகுதியுடைய அனைவரும் கலந்து கொள்ளலாம்.

மேலும், இம்முகாமில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் தங்களது சுய விவரம் (Resume), கல்விச்சான்று, ஆதார் அட்டை ஆகியவற்றின் நகல்களுடன் வேலை வாய்ப்பு முகாம் நடைபெறும் நாளன்று காலை 09.00 மணிக்கு வேலைவாய்ப்பு முகாமில் பங்கேற்கலாம்.

இம்முகாமில் கலந்து கொள்ள விரும்பும் வேலைநாடுநர்கள் https://forms.gle/8AKg3UHmWUed-2mQX6 என்ற இணைப்பில் முன்பதிவு செய்தும், முகாமில் பங்கேற்க உள்ள தனியார்துறை நிறுவனங்கள் https://forms.gle/aeFHo5dHo6zwj1ze7 என்ற இணைப்பில் பதிவு செய்வதும் அவசியமாகும்.

அதுமட்டுமன்றி, தனியார் துறை வேலை வாய்ப்பு இணையமான www.tnprivatejobs.tn.gov.in என்ற இணையதளத்திலும் வேலைநாடுநர்கள் மற்றும் நிறுவனங்கள் தங்களது விவரங்களை பதிவு செய்திடல் வேண்டும். மேலும், வேலைவாய்ப்பு தொடர்பான பல்வேறு தகவல்களைப் பெற SIVA-GANGAI EMPLOYMENT OF-FICE â¡øTelgram channel-™ இணைந்து பயன்பெறலாம். இம்முகாமில் வேலை வாய்ப்பு பெற்று பணிநியமனம் பெறும் பதிவுதாரர்களுடைய வேலைவாய்ப்பு பதிவு மூப்பு இரத்து செய்யப்பட மாட்டாது.

மேலும், இவ்வேலை வாய்ப்பு முகாமில் போட்டித் தேர்வுகளுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகளுக்கான மாணவர் சேர்க்கை விண்ணப்பம், பல்வேறு திறன் பயிற்சிகளுக்கான ஆட்சேர்ப்பு விண்ணப்பம் மற்றும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகை விண்ணப்பம் ஆகியவைகளும் வழங்கப்படும்.

எனவே, சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த வேலை நாடுநர்கள் இத்தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் அதிக அளவில் பங்கேற்று பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.



## புத்தன்துறை கடற்கரை பகுதியில் கடல் அரிப்பினால் ஏற்பட்ட பாதிப்புபளை மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு

கன்னியாகுமரி, ஜூலை.25-

கன்னியாகுமரி மாவட்டம் புத்தன்துறை கடற்கரை பகுதியில் கடல் அரிப்பினால் சேதமடைந்த பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டம் புத்தன் துறை கடற்கரை பகுதியில் நேற்று 23.07.2025 முதல் அதிகமான கடல் சீற்றத்தின் காரணமாக, கரையை ஒட்டியுள்ள பகுதிகளில் மணல் அரிப்பு ஏற்பட்டு, 12 வீடுகள் சேதம் அடைந்தன. தென்னை மரங்களும் சாய்ந்துள்ளன. தற்காலிகமாக கடல் அரிப்பை தடுக்க உடனடியாக பணிகள் மேற்கொள்ள துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் பாதிக்கப்பட்ட பொதுமக்களிடம் இப்பகுதியில் கடல் அரிப்பு தடுப்பு சுவர் அமைப்பதற்கான திட்ட மதிப்பீடு மீன்பிடி துறைமுக கோட்டம் மூலம் தயார் செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று, நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து கடல் சீற்றம் அதிகமாக உள்ளதால் இங்குள்ள பொதுமக்கள் அரசு ஏற்பாடு செய்துள்ள முகாம்களில் தங்கி இருக்கும் படி கேட்டுக்கொள்ளப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வில் நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் செல்வி. எஸ்காளீஸ்வரி, மீன்வளத்துறை உதவி இயக்குநர் திருமதி.தீபா, மீன்வளத்துறை மீன் பிடி துறைமுக கோட்டம் அலுவலர்கள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## கைத்தறி துறை சார்பாக நடத்தப்படும் சிறப்பு பட்டு கைத்தறி கண்காட்சிக்கு இலக்காக ரூபாய் 3.00 கோடி பட்டு ஜவுளிகள் விற்பனை நிர்ணயம்

மதுரை, ஜூலை.25-

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் விற்பனையினை ஊக்குவிக்கும் நடவடிக்கையாக கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக கும்பகோணம், காஞ்சிபுரம், சேலம், கடலூர் மற்றும் திருவண்ணாமலை, சரகங்களில் உள்ள பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் பட்டுச் சேலைகள் மற்றும் பட்டு வேட்டிகளின் சிறப்பு பட்டு கைத்தறி கண்காட்சி ஆண்டு தோறும் மதுரை மாநகரில் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாளினை முன்னிட்டு சிறப்பு பட்டு கைத்தறி கண்காட்சி மதுரையில் 30.12.2024 முதல் 12.01.2025 வரை நடைபெற்றது. இதில் ரூ 2.31 கோடி மதிப்புள்ள பட்டு ஜவுளிகள் விற்பனை செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஆடி மாதத்தினை முன்னிட்டு, சிறப்பு பட்டு கைத்தறி கண்காட்சி 23.07.2025 முதல் 06.08.2025 வரை 1‘5 நாட்களுக்கு, மதுரை 24, ஜடாமுனி கோவில் தெருவில் உள்ள எல்.என்.எஸ். மஹாலில் நடத்தப்படவுள்ளது. இச்சிறப்பு பட்டு கைத்தறி கண்காட்சியில் 17 அரங்குகள் அமைக்கப்பட்டு மேற்கண்ட சரகங்களை சேர்ந்த 21 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் கலந்து கொள்ள உள்ளன. இக்கண்காட்சியில் பட்டு இரகங்களுக்கு 10% முதல் 65% வரை சங்க சிறப்பு தள்ளுபடி மற்றும் அரசு அனுமதித்த தள்ளுபடி வழங்கப்படுகிறது. இக்கண்காட்சியில் ரூ 3.00 கோடி மதிப்புள்ள பட்டு ஜவுளிகள் விற்பனை இலக்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இக் கண்காட்சியினை திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க செயலாட்சியர் திருமதி.கு.சங்கரேஸ்வரி அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி, முதல் விற்பனையை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மதுரை சரக உதவி இயக்குநர் திரு.செ.மாதவன் அவர்கள், கைத்தறி துறை அலுவலர்கள் மற்றும் சங்கப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## தூத்துக்குடி மாவட்டத்துக்கு ஆக.5ல் உள்ளூர் விடுமுறை அறிவித்து மாவட்ட ஆட்சியர் உத்தரவு

தூத்துக்குடி, ஜூலை.25-

தூத்துக்குடி மாவட்டத்துக்கு ஆக.5ல் உள்ளூர் விடுமுறை அறிவித்து மாவட்ட ஆட்சியர் இளம்பகவத் உத்தரவிட்டுள்ளார். தூத்துக்குடி பனிமய மாதா ஆலய பெருவிழாவை ஒட்டி ஆக.5ம் தேதி உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் விடுமுறையை ஈடு செய்யும் வகையில் ஆக.9ம் தேதி பணி நாளாக செயல்படும் என ஆட்சியர் அறிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்ததாவது; தூத்துக்குடி, தூய பனிமய மாதா திருத்தலப் பேராலய பெருவிழா ஆகஸ்ட் 5ம் தேதி கொண்டாடப்படுவதை முன்னிட்டு வருகிற 5.8.2025, செவ்வாய்கிழமை தூத்துக்குடி மாவட்டம் முழுவதும் உள்ளூர் விடுமுறையாக அறிவிக்கப்படுகிறது.

எனினும் அத்தியாவசிய பணிகள், பணியாளர்களுக்கு இவ்விடுப்பு பொருந்தாது என தெரிவிக்கப்படுகிறது. இது செலவாணி முறிச் சட்டத்தின்படி (Negatiable Instruments Act 1881) பொது விடுமுறை நாளல்ல எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த விடுமுறைக்கு பதிலாக 9.8.2025 இரண்டாம் சனிக்கிழமை அலுவலக நாளாக அறிவிக்கப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஆடி அமாவாசை: தேனி வீரபாண்டி பெரியாற்றங்கரையில் தர்ப்பண வழிபாட்டில் ஈடுபட்ட பக்தர்கள்

தேனி, ஜூலை.25-

ஆடி அமாவாசையை முன்னிட்டு ஏராளமானோர் வீரபாண்டி பெரியாற்றங்கரையில் முன்னோர்களுக்கான தர்ப்பண வழிபாட்டில் ஈடுபட்டனர். பின்பு அன்னதானம் வழங்கி கோயில்களில் வழிபாடு செய்தனர்.

இந்துக்களின் முன்னோர் வழிபாடாக ஆடி அமாவாசை இருந்து வருகிறது. இந்நாட்களில் கடற்கரை, ஆற்றங்கரை மற்றும் பல்வேறு நீர்நிலைகளில் பொதுமக்கள் நீராடி தங்கள் முன்னோர்களை நினைத்து தர்ப்பணம் கொடுத்து வழிபாடு செய்வது வழக்கம். இதன் மூலம் மூதாதையர்களின் ஆன்மா சாந்தி அடைந்து, அவர்களின் ஆசி குடும்பத்துக்கு கிடைப்பதுடன், சந்ததியும் விருத்தி அடையும் என்பது நம்பிக்கை. இதன்படி தேனி மாவட்ட த்தில் வீரபாண்டி முல்லை பெரியாற்றங்கரையில் இன்று (ஜூலை 23) ஏராளமான பக்தர்கள் தர்ப்பணம் செய்தனர். ஆற்றில் நீராடி பின்பு தங்கள் முன்னோர்களுக்கான வழிபாடுகளை மேற்கொண்டனர். இதற்காக மூதாதையர்களுக்கு பிடித்த உணவுகளை படையலிட்டு எள், சோற்றுடன் பிண்டங்களாக ஆற்றில் கரைத்தனர். தொடர்ந்து யாசகர் களுக்கு அன்னதானம், கால்நடைகளுக்கு கீரைகளை வழங் கினர். பின்பு கண்ணீஸ் வரமுடையார், கவுமாரியம்மன் கோயில்களில் சுவாமி தரிசனம் செய்தனர். ஆடி அமாவாசையை முன்னிட்டு ஏராளமானோர் வாகனங்களில் உணவுகளை கொண்டு வந்து பக்தர்களுக்கு தானம் அளித்தனர். இது குறித்து புரோகிதர்கள் கூறுகையில், தர்ப்பணமும், திவசமும் வெவ்வேறு வழிபாடு ஆகும். தர்ப்பணம் என்பது மூதாதையர்களை திருப்தி செய்வதுடன் நீரை அவர்களுக்கு அளித்து அருளைப் பெறுவது ஆகும். இதற்காக அமாவாசையில் எள்ளும், நீரும் கலந்து வழிபாடு செய்யப்படுகிறது.

திவசம் என்பது இறந்தவர்கள் எந்த மாதம் எந்த திதியில் இறந்தார்களோ அந்த திதியில் மேற்கொள்ளப்படும் வழிபாடு ஆகும். இன்று(ஜூலை 24) ஆடி அமாவாசை என்பதால் வீரபாண்டியில் ஏராளமானோர் வந்து தர்ப்பணம் செய்தனர் என்றனர். இதேபோல் சுருளி அருவி, தேவதானப்பட்டி மூங்கிலணை காமாட்சி அம்மன், கோடாங்கிபட்டி தீர்த்த தொட்டி முருகன் கோயில், போடி காசிவிசுவநாதர் ஆலயம், உப்புத்துறை மாளிகைப் பாறை கருப்பசாமி கோயில், ஜம்புலிபுத்தூர் கதலிநரசிங்கப்பெருமாள் கோயில், ஆண்டிபட்டி வேலப்பர் கோயில் உள்ளிட்ட மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றது.

# மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு

சிவகங்கை, ஜூலை.25-

தமிழ்நாட்டில் சொந்தக் கட்டடங்களில் இயங்கும் கிறித்துவ தேவாலயங்களை பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக, மானியத் தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் தேவாலயங்களில் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்வதற்கு, தேவாலயங்கள் 10 ஆண்டுகளுக்கும் மேலாக சொந்த கட்டடத்தில் இயங்கி இருத்தல் வேண்டும். தேவாலயத்திற்காக வெளிநாட்டிலிருந்து எவ்வித நிதி உதவியும் பெற்றிருத்தல் கூடாது. மேலும், இத்திட்டத்தின் கீழ் ஒரு தேவாலயத்திற்கு மானியத்தொகை வழங்கிய பின்னர், 5 வருடத்திற்கு அத்தேவா லயம் இம்மானியத்தொகை வேண்டி விண்ணப்பிக்க தகுதியற்றதாகும்.

மேலும், குறிப்பிட்டுள்ள திட்டத்தின் கீழ் கூடுதலாக தேவாலயங்களில் பீடம் கட்டுதல், கழிவறை வசதி அமைத்தல், குடிநீர் வசதிகள் உருவாக்குதல், சுவிசேஷம் வாசிக்கும் ஸ்டாண்ட், மைக்செட் (ம) ஒலிப்பெருக்கி அமைத்தல், நற்கருணை பேழை பீடம் அமைத்தல், திருப்பலிக்கு தேவையான கதிர் பாத்திரங்கள், சுரூபங்கள், மெழுகுவர்த்தி ஸ்டான்ட்கள் (ம) பக்தர்கள் அமர்ந்து முழங்காலிட்டு இருக்க தேவையான பெஞ்சுகள் போன்ற ஆலயங்களுக்கு தேவையான உபகரணங்கள்,

தேவாலயத்திற்கு சுற்றுச்சுவர் வசதி அமைத்தல் போன்ற கூடுதல் பணிகள் மேற்கொள்ளவும், கட்டடத்தின் வயதிற்கேற்ப மானியத் தொகை உயர்த்தியும் வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது.

அதன்படி, தேவாலய கட்டடத்தின் வயது 10 முதல் 15 வருடம் வரையாக இருப்பின் ரூபாய் 10 இலட்சமும், தேவாலய கட்டடத்தின் வயது 15 முதல் 20 வருடம் வரையாக இருப்பின் ரூபாய் 15 இலட்சமும், தேவாலய கட்டடத்தின் வயது 20 வருடத்திற்கு மேல் இருப்பின் ரூபாய் 20 இலட்சமுமாக தற்போது உயர்த்தி மானியமாக வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க, மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தை நேரில் அணுகி விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பில் மாவட்ட சிறுபான்மையினர் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு அரசுத்துறை அலுவலர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம்

## தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் அருட்தந்தை சொ.ஜோ. அருண்., சே.ச தலைமையில் நடைபெற்றது

மதுரை, ஜூலை.25-

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் அருட்தந்தை சொ.ஜோ.அருண்., சே.ச., தலைமையில் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பில் மாவட்ட சிறுபான்மையினர் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு அரசுத்துறை அலுவலர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. சிறுபான்மையினர்களின் உரிமைகள், பாதுகாப்புகள் மற்றும் அவர்களுக்கான நலத்திட்டங்கள் சரியாக வழங்கப்படுகிறதா என்று மாவட்டம் தோறும் ஆய்வு மேற்கொண்டு வருகிறது. இதுவரை இந்த ஆணையம் சார்பாக 24 மாவட்டங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, 709 கோரிக்கைகள் பெறப்பட்டதில் 542 க்கும் மேற்பட்ட கோரிக்கைகள் தீர்வு காணப்பட்டுள்ளது. மேலும் இன்றையதினம் மதுரை மாவட்டத்தில் 25 வது கலந்துரையாடல் கூட்டம் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் எழுப்பப்பட்ட கோரிக்கைகளில்70 சதவீத பிரச்சனைகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மற்றும் மாவட்ட காவல் துறையினர் ஆகியோர் அங்கேயே தொடர்புடைய அரசு அலுவலர்களிடம் கலந்துரையாடி, தெளிவாக பிரச்சினைகளை தீர்வு காண்பதற்கு வழிவகை செய்து கொடுத்தார்கள். சிறுபான்மையினருக்கு கல்லறை தோட்டம் அமைப்பது, பள்ளிகளில் நியமன ஒப்புதல், பள்ளிகளுக்கு அங்கீகாரம், வழிபாட்டு தலங்கள் மற்றும் ஆலயங்களுக்கான தடை விழா சான்று போன்ற கோரிக்கைகள் நிறைய வரப்பட்டுள்ளன.

மேலும் 38 மாவட்டங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பின்னர், இந்த ஆணையம் சார்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கும் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தேவையான பரிந்துரைகளை இந்த ஆணையம் வழங்கும்.

சிறுபான்மையின மக்கள் மற்றும் அவர்தம் நிறுவனத்தில் இருந்து பெறப்படும் கோரிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களை நேரில் விசாரணை செய்து அவர்களால் எழுப்பப்படும் பிரச்சினைகள் மீது தொடர்புடைய அரசுத்துறைகளிடமிருந்து அறிக்கைகள் இந்த ஆணையம் பெறுகிறது.

சிறுபான்மையினரின் பிரச்சினைகளை கண்டறியும் பொருட்டு மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளை பார்வையிட்டு நலத்திட்டங்களை திறம்பட செயல்படுத்த அரசுக்கு தக்க பரிந்துரைகளை தமிழ்நாடு மாநில சிறுபான்மையினரின் ஆணையம் செய்து வருகிறது.

தமிழ்நாடு அளவில் உள்ள சிறுபான்மையினர் மக்களின் முக்கிய கோரிக்கையாக உள்ள கிறித்துவர்களுக்கான கல்லறை தோட்டங்கள், முஸ்லிம்களுக்கான அடக்கஸ்தளம் இல்லாத இடங்களில் இரண்டு ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, கல்லறைத் தோட்டம், அடக்கஸ்தளம் அமைக்க நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு அரசாணை வெளியிட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் 1 மூலம் 2024 முதல் தற்போது வரை 304 பயனாளிகளுக்கு சிறு தொழில்,கல்வி உதவித்தொகை மருத்துவ உதவி தொகை என ரூபாய் 45.60 லட்சம் மதிப்பிலும், முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் 2 மூலம் 2025 முதல் தற்போது வரை 100 பயனாளிகளுக்கு ரூபாய் 15 லட்சம் மதிப்பீட்டில் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிறித்தவ மகளிர் உதவும் சங்கம் 1 மூலம் 2024 முதல் தற்போது வரை 158 பயனாளிகளுக்கு சிறு தொழில்,கல்வி உதவித்தொகை மருத்துவ உதவி தொகை என ரூபாய் 23.70 லட்சம் மதிப்பிலும், கிறித்தவ மகளிர் உதவும் சங்கம் 2 மூலம் 2025 முதல் தற்போது வரை 156 பயனாளிகளுக்கு ரூபாய் 23.4 லட்சம் மதிப்பீட்டில் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் உலமா வாரியத்தில் 532 உறுப்பினர்கள் பதிவு செய்துள்ளனர். பதிவு பெற்ற வக்பு நிறுவனங்களில் பணியாற்றும் உலமா பணியாளர்களுக்கு இரு சக்கரம் வாங்க மானியம் வழங்கும் திட்டம், மிதிவண்டி வழங்கும் திட்டம் மற்றும் முதியோர் ஓய்வூதியம் போன்றவை வழங்கப்படுகின்றன. கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியத்தில் மதுரை மாவட்டத்தில் இதுவரை 74 உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

கிருத்துவ தேவாலயங்களை பழுது பார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணி மேற்கொள்ள தேவாலய கட்டடத்தின் வயது ஆகியவற்றை கருத்தில் கொண்டு 10 முதல் 15 வருடம் வரை ரூபாய் 10 லட்சம், 15 முதல் 20 வருடம் வரை ரூபாய் 15 லட்சமும், 20 வருடங்களுக்கு மேல் இருப்பின் ரூபாய் இருவது லட்சமும் தமிழ்நாடு அரசு மானிய தொகையாக வழங்குகிறது.

தமிழ்நாட்டில் பொருளாதாரத்தில் பின்தங்கி இருக்கும் இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், புத்த மதத்தினர், சீக்கியர்கள், பார்ஸியர்கள் மற்றும் ஜெயின் பிரிவை சார்ந்த மத வழி சிறுபான்மையின மக்கள் சுய தொழில் மேற்கொள்ள குறைந்த வட்டி விகிதத்தில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகம் மூலம் கடன் வழங்கப்படுகிறது. மேலும், 38 மாவட்டங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பின்னர், இந்த ஆணையம் சார்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கும் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தேவையான பரிந்துரைகளை இந்த ஆணையம் வழங்கும். இந்த ஆணையத்தில் பொதுமக்கள் தெரிவிக்கும் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு அலுவலர்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தெரிவித்தார்.

முன்னதாக மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் அவர்கள் சிறு வணிக உதவி தொகை மற்றும் இரு சக்கர வாகனம் மானியத் தொகை என 23 பயனாளிகளுக்கு ரூபாய் 3 லட்சத்து 65 ஆயிரம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே. பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள், மாநகர காவல் துணை ஆணையர் (வடக்கு) திருமதி ஜி. எஸ்.அனிதா, த.கா.ப., அவர்கள், தமிழ்நாடு மாநில சிறுபான்னையினர் ஆணைய துணை தலைவர் திரு.அப்துல் குத்தூஸ் (எ) இறையன்பன் குத்தூஸ் அவர்கள், உறுப்பினர்கள் திரு. ஹாமில்டன் வில்சன் அவர்கள், திரு. ஸ்வர்ணராஜ் அவர்கள், திரு.நாகூர் ஏ.எச்.நஜ்முதீன் அவர்கள், திரு.பிரவீன்குமார் டாட்டியா அவர்கள், திரு.ராஜேந்திர பிரசாத் அவர்கள், திரு.எம். ரமீட் கபூர் அவர்கள், திரு.ஜே. முகம்மது ரபி அவர்கள், திரு.எஸ்.வசந்த் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அன்பழகன் அவர்கள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு. முத்துக்கிருஷ்ணன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# முழு கொள்ளளவை எட்டும் நிலையில் ஆழியாறு அணை: ஆழியாறு கரையோரப் பகுதி மக்களுக்கு பாதுகாப்பு எச்சரிக்கை

கோவை, ஜூலை.25-

பொள்ளாச்சி ஆழியாறு அணை முழு கொள்ளளவு எட்டும் நிலையில் இருப்பதால் மதகுகள் வழியாக உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. பொள்ளாச்சி ஆழியாறு அணை மொத்தம் 120 அடி உயரம் கொண்டது. கடந்த மாதம் முதலே தென்மேற்கு பருவ மழையானது தொடங்கி மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் அமைந்துள்ள வால்பாறை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில், காவேரிக்குள் மீன்பூடிக்கும் பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக ஆழியாறு அணை நீர் அதிகரித்து காணப்பட்டது. இந்நிலையில், 120 கொள்ளளவு கொண்ட ஆழியாறு அணை 119ஆக எட்டியுள்ளது. வினாடிக்கு 1,077 கன அடி தண்ணீர் ஆழியாறு அணைக்கு வந்து கொண்டு இருப்பதால் 120 கொள்ளை கொண்ட அணை திறக்கும் தருவாயில் உள்ளது. அணையை பாதுகாப்பு உறுதி செய்யும் வகையில் மூன்று மதகுகள் வழியாக சுமார் 1,329 கனஅடி தண்ணீர் தற்போது வெளியேற்றப்பட்டு வருகிறது. இதனால் ஆழியாறு ஆற்றங்கரையை ஒட்டியுள்ள பகுதிகளில் உள்ள மக்கள் ஆற்றில் இறங்க கூடாது என பொதுப்பணித்துறை அதிகாரிகள் வெள்ள ஆபாய எச்சரிக்கை கொடுத்துள்ளனர்.

# கேரள மருத்துவ கழிவுகள் கொட்டுதை தடுக்க நெல்லை எஸ்பி தலைமையில் குழு: ஐகோர்ட்டில் அரசு தகவல்

மதுரை, ஜூலை.25-

நெல்லை மாவட்டத்தில் கேரள மருத்துவ கழிவுகள் கொட்டுவதை தடுக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் குழு அமைத்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என உயர் நீதிமன்றத்தில் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.



தென்காசியை சேர்ந்த சிதம்பரம், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: நெல்லை, தென்காசி மாவட்டங்களில் கேரள மாநிலங்களிலிருந்து கொண்டு வரப்படும் மருத்துவ கழிவுகள் கொட்டப்படுகிறது. இதை தடுக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் கடந்த 2018ல் பொதுநல மனு தாக்கல் செய்யப்பபட்டது.

அப்போது நெல்லை மாவட்ட ஆட்சியர் தாக்கல் செய்த பதில் மனுவில், நெல்லை மாவட்ட ஆட்சியர் தலைமையில் சுகாதாரத் துறை, காவல் துறை, போக்குவரத்து துறை அலுவலர்களை இணைத்து மருத்துவ கழிவுகள் மேலாண்மை குழு அமைக்கபட்டு நெல்லை மாவட்டத்திற்குள் நுழையாதவாறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது எனக் கூறப்பட்டது.

இதை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள் வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டனர். இருப்பினும் தற்போதும் கேரளாவில் இருந்து நெல்லை மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் மருத்துவக் கழிவுகள் தொடர்ந்து கொட்டப்பட்டு வருகிறது. இதனால் மருத்துவக் கழிவுகள் கொட்டுவதை தடுக்க நெல்லை மாவட்ட ஆட்சியர் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், ஏ.டி.மரியகிளாட் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பில், கேரளா மாநிலங்களில் இருந்து கொண்டுவரும் மருத்துவ கழிவுகளை முற்றிலும் தடுக்கும் விதமாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு கேரளாவில் இருந்து மருத்துவக் கழிவுகள் மாவட்டத்துக்குள் கொண்டு வருவதை தடுக்க உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டது. இதை பதிவு செய்து கொண்டு வழக்கை முடித்து வைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# “உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு திட்ட முகாமானது வருகின்ற 25.7.2025 அன்று

# காரைக்குடி மாநகராட்சி, திருப்புவனம் பேரூராட்சி மற்றும் திருப்பத்தூர், சிவகங்கை, கண்ணங்குடி, சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவைகளில் குறிப்பிட்ட பகுதிகளுக்கான முகாம்கள், குறிப்பிட்ட பகுதிகளில் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.25-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள ”உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு திட்ட முகாமானமது, சிவகங்கை மாவட்டத்தில் 15.7.2025 அன்று முதல் செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, 15.7.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள ”உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை தொடர்ந்து, வருகின்ற ஜூலை 25ஆம் தேதி காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 15,17,18 ஆகிய பகுதிகளுக்கென ஸ்ரீ தேவேந்திரன் மஹாலிலும், திருப்புவனம் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 1,2,3,8,9 ஆகிய பகுதிகளுக்கென திருப்புவனம் மருதுபாண்டியர் மஹாலிலும், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென திருக்களாபட்டி அரசு உயர்நிலைப்பள்ளியிலும், சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென கண்டாங்கிப்பட்டி பல்வகை பயன்பாட்டு நிலையத்திலும், கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கென கண்ணங்குடி உயர்நிலைப் பள்ளியிலும், சிங்கம் புணரி ஊராட்சி ஒன்றியத் திற்குட்பட்ட பகுதிகளுக்கென பிரான்மலை, அறிவியூர் வடக்கு வளவு நகரத்தார் மண்டபத்திலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது நடைபெறவுள்ளது.

மேலும், ”உங்களுடன் ஸ்டாலின்” முகாம்களின் வாயிலாக, நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அந்தந்த துறைகளால் சேவைகள் வழங்கப்படும். அதில், நகர்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், கிராமப் புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது.

இதில் சொத்துவரி, குடிநீர் வசதி உரிமங்கள் மற்றும் அனுமதி, கழிவு நீர் இணைப்பு, அடிப்படை வசதிகள், பராமரிப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலி மனைவரி, தெரு வியாபாரி அடையாள அட்டை, சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவைகள் நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மேலும்,பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் திருத்தம், பட்டா சிட்டா நகல், பிறப்பு, இறப்பு சான்று வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட மனுக்களுக்கு இம்முகாமில் உடனடி தீர்வு காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் மனு அளித்திட விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகளும் இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு மனு அளிக்கலாம்.

எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் அந்தந்த பகுதியில் முகாம் நடைபெறும் நாளன்று, உரிய ஆவணங்களுடன் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

# அஜித் மரண வழக்கு: நிகிதாவிடம் சிபிஐ அதிகாரிகள் விசாரணை

சிவகங்கை, ஜூலை.25-



திருப்புவனம் அஜித் குமார் மரண வழக்கில் நிகிதாவிடம் சிபிஐ அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். மடப்புரம் கோயிலில் தனது நகையை திருடியதாக அஜித்குமார் மீது நிகிதா புகார் அளித்திருந்தார். நிகிதாவின் புகாரை அடுத்து அஜித்குமாரை சிறப்பு தனிப்படை போலீஸ் அழைத்துச் சென்றனர். சிறப்பு தனிப்படை போலீசார் தாக்கியதில் அஜித்குமார் உயிரிழந்த நிலையில் வழக்கு சிபிஐக்கு மாற்றம் செய்யப்பட்டது.



## நடிகர் சூர்யாவின் 50வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, செங்கல்பட்டு வடக்கு மாவட்ட சூர்யா நற்பணி இயக்கத்தின் சார்பில் நலத்திட்ட உதவி

செங்கல்பட்டு, ஜூலை.25-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டையில் நடிகர் சூர்யாவின் 50வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, செங்கல்பட்டு வடக்கு மாவட்ட சூர்யா நற்பணி இயக்கத்தின் சார்பில் குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் பிறந்த ஐந்து பெண் குழந்தைகளுக்கு தங்க மோதிரங்களும், ஐந்து ஆண் குழந்தைகளுக்கு வெள்ளி நாணயங்களும், மேலும் 25 குழந்தைகளுக்கு குழந்தை பராமரிப்பு பெட்டகங்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் அகில இந்திய சூர்யா நற்பணி இயக்கத்தின் கௌரவத் தலைவர் ராஜசேகர் கற்பூர சுந்தரபாண்டியன், தலைவர் பரமு, செயல் தலைவர் ஆரி, அமைப்பாளர் ஹரி ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். செங்கல்பட்டு வடக்கு மாவட்டத் தலைவர் அயன் சூர்யா ஏற்பாடு செய்திருந்தார் இதில் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட சூர்யா நற்பணி இயக்கத்தின் நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

## பெல்ஜியம் நாட்டின் அருணா லெரூயிட்டின் கடத்தல் மற்றும் தத்தெடுப்புச் சம்பவம் குறித்து பத்திரிகையாளர் சந்திப்பு

மதுரை, ஜூலை.25-

தத்தெடுக்கப்பட்டோரின் உரிமைக் கவுன்சிலும் எக்தா அமைப்பின் பிரதிநிதியும் பெல்ஜியப் பிரஜையான அருணா லெரூயிட்டு என்பவர் சர்வதேச தத்தெடுப்பு மோசடியில் இரையாகி இருக்க வாய்ப்புள்ளது. அவருடைய உயிரின் உண்மைச் சித்தாந்தங்களை கண்டறிய பொதுமக் களின் உதவியை நாடுகிறோம். அருணா லெரூயிட்டு, (வயது) 30,1994 ஆம் ஆண்டு மலேசிய சமூக சேவை நிறுவனத்தால் தத்தெடுக்கப்பட்டு பெல்ஜியத்துக்குக் கொண்டுவரப்பட்டு. அங்கு வாழ்ந்து வருகின்றார். தற்போது ஒரு அலுவலகத்தில் செயலாளராக பணியாற்றுகிறார். அவருடைய தாயக விவரங்கள் மற்றும் பெற்றோர் குறித்த ஆவணங்களில் மிகுந்த குழப்பங்களும் சிக்கல்களும் உள்ளதால்,



தத்தெடுக்கப்பட்ட விதத்தின் உண்மை தன்மை பற்றி கேள்விகள் எழுந்துள்ளன அருணாவின் தத்தெடுப்புக்கு இணைந்துள்ள அதிகாரப்பூர்வ ஆவணங்களின்படி, அவர் 1992ல் பிறந்து, 1993ல் தத்தெடுக்கப்பட்டதாகவும், அவரது தாயின் பெயர் சகுந்தலா என்றும், முகவரி கோணார் தெரு, பழையம் கிராமம், மதுரை, இந்தியா என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பலமான தேடல்களுக்குப் பிறகும், அந்த முகவரி உண்மையில் இருந்ததா அல்லது இருக்கிறதா என்பதையும் உறுதிப்படுத்த முடியவில்லை. இதனால் ஆவணங்களின் உண்மை தன்மையே சந்தேகத்தில் உள்ளதாகும். இதை மேலும் தீவிரமாக்கியது, 2005ல் மலேசிய சமூக சேவை தத்தெடுப்பு மோசடியில் ஈடுபட்டதாக வெளியான பெரும் ஊழல் விவகாரம். இந்த அமைப்பின் மூலம் பல குழந்தைகள் சட்டவிரோதமாக கடத்தப்பட்டு வெளிநாட்டில் தத்தெடுக்க அனுப்பப்பட்டனர். பல ஆவணங்கள் போலியாக தயாரிக்கப்பட்டு, தத்தெடுப்பு சட்டப்படி நடந்தது என காட்டப்பட்டு ள்ளது. அருணா தொடர்பான ஆவணங் களிலும் காலக் கெடுவிலும் பெரும் முரண்பாடுகள் இருப்பதால், அவர் 1993 ல் சுமார் 1.5 வயதில் தனது குடும்பத்திடமிருந்து ஆவணமில்லாமல் கடத்தப்பட்ட குழந்தைகளில் ஒருவர் எனும் சந்தேகம் எழுகிறது. இது உணர்வுப் பூர்வமான குடும்பத் தேடல், அடையாளம் மற்றும் இழப்புகளின் மனிதக் கதை. அருணா பதில்கள் நாடுகிறாள். எந்தவொரு உயிர்த்துணையும் இப்போது அவரைத் தேடிக்கொண்டிருக்கலாம். இந்த உண்மையை நுட்பமாகவும் மரியாதையுடனும் மீட்டெடுப்பதே எங்களது நோக்கம்.அருணா தனது மூலக்குடியைத் தேட உதவும் மதுரை பகுதியைச் சேர்ந்த சகுந்தலா (எ) பெண் கோணார் தெரு ,பழையம்கிராமம் நீங்கள் அறிந்திருந்தால் காணாமல் போன குழந்தையைப் பற்றி ஏதேனும் தகவல் இருந்தால், எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்புக்கு: anjalipawar575@gmail.com

எக்தா அமைப்பு: 7639353494, 9822206485

## சோழிங்கநல்லூர் தொகுதி ஒட்டியம்பாக்கம் ஊராட்சி அலுவலகத்தில் "உங்களுடன் ஸ்டாலின் முகாம்"

ஒட்டியம்பாக்கம், ஜூலை.25-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியம், ஒட்டியம்பாக்கம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் ஜூலை (22) "உங்களுடன் ஸ்டாலின் முகாம்" மாண்புமிகு தமிழக முதல்வர், மு .க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், மாண்புமிகு துணை முதல்வர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன் வழிகாட்டுதலில், சிறப்பு அழைப்பாளராக சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ். அரவிந்த் ரமேஷ் முகாமில் மக்களை தேடி மருத்துவ, எந்த குறையாக இருந்தாலும் முகாமில் மனுக்களாக அளிக்கலாம் என்ற முதல்வர் உத்தரவின்



பேரில் பல்வேறு துறைகளில் சார்ந்த அரசு அதிகாரிகள், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ் .அரவிந்த் ரமேஷ் பொதுமக்களின் குறைகளை பொறுமையாக கேட்டு அறிந்து மனுக்களாக பெற்று விரைவில் தீர்வு காணப்படும் என்று பொதுமக்களுக்கு உறுதி அளித்தனர். தொடர்ந்து முகாமில் சில துறைகளில் மூலம் உடனுக்குடன் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டது. நிகழ்வில் புனித தோமையார் மலை ஒன்றிய செயலாளர், கோவிலம்பாக்கம், ஜி. வெங்கடேசன், ஒன்றிய பெருந்தலைவர் சங்கீதா பாரதி ராஜன், மாவட்ட கவுன்சிலர், என். வேதகிரி, ஒட்டியம்பாக்கம் ஊராட்சி மன்ற துணைத் தலைவர், லோகிதாஸ், சித்தாலப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர், எஸ். ரவி, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், ஓ.கே. எஸ்.சதீஷ், ஒட்டியம்பாக்கம் ஊராட்சி செயலர், முருகன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்ட முகாமில் பொதுமக்கள் ஆர்வத்துடன் முகாமில் மனுக்களுக்கு விரைவில் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் கூறி சென்றது குறிப்பிடத்தக்கது.

## சோழிங்கநல்லூர் 194 வது வட்ட திமுக சார்பில் "உங்களுடன் ஸ்டாலின் முகாம்"

ஈஞ்சம்பாக்கம், ஜூலை.25-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட ஈஞ்சம் பாக்கத்தில் கைலாஷ் கார்டனில் ஜூலை (23) "உங்களுடன் ஸ்டாலின் முகாம்" தமிழக முதல்வர், மு .க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க,கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் , உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன் வழிகாட்டுதலில், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ். அரவிந்த் ரமேஷ் மற்றும் 15வது மண்டல குழு தலைவர் வி. இ. மதியழகன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்கள். முகாமில் 194 வது (அ) வட்டச் செயலாளர், குங்பூ மாஸ்டர், எஸ் . கர்ணா, 194 வது மாமன்ற உறுப்பினர், விமலா கர்ணா சிறப்பாக நிகழ்ச்சி ஏற்பாடு செய்தனர். உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மக்களை தேடி மருத்துவ, எந்த குறையாக



இருந்தாலும் முகாமில் மனுக்களாக அளிக்கலாம் என்ற முதல்வர் உத்தரவின் பேரில் பல்வேறு துறைகளில் சார்ந்த அரசு அதிகாரிகள், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ் .அரவிந்த் ரமேஷ்

பொதுமக்களின் குறைகளை பொறுமையாக கேட்டு அறிந்து மனுக்களாக பெற்று விரைவில் தீர்வு காணப்படும் என்று பொதுமக்களுக்கு உறுதி அளித்தனர். தொடர்ந்து முகாமில் சில துறைகளில் மூலம் உடனுக்குடன் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டது. முகாமில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்,

கா. வீ .தியாகராஜன், 194வது வட்டச் செயலாளர், ஆர் .எம்.கார்த்திகேயன்

உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் முகாமில் பொதுமக்கள் ஆர்வத்துடன் முகாமில் மனுக்களுக்கு விரைவில் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் முகாமில் மனுக்களை அழித்தனர். சிலர் துறை சார்ந்த மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்பட்டது. முகாமில் கூட்டம் அலைமோதியதால் எம்.எல்.ஏ . எஸ். அரவிந்த் ரமேஷ் மகளிர் உரிமைத் தொகைக்காக சுமார் 2000 மகளிருக்கு தன் கையாலேயே விண்ணப்பங்களை வழங்கி வழிநடத்தியதை பார்த்த பொதுமக்கள் பாராட்டி சென்றனர் குறிப்பிடத்தக்கது.



## பழனியில் பொது சொத்தை சேதம் விளைவித்த வழக்கில் 25 ஆண்டுகள் தலைமறைவாக இருந்த பிடியானை குற்றவாளி கைது

திண்டுக்கல், ஜூலை.25-

திண்டுக்கல் மாவட்டம், பழனி தாலுகா காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் கடந்த 2000ம் ஆணடு பொது சொத்து சேதம் விளைவித்த வழக்கில் நெய்க்காரப்பட்டி பகுதியைச் சேர்ந்த கோவிந்தராஜன் வயது 50 இவர் நீதிமன்ற பிணை பெற்று வெளியே சென்று நீதிமன்றத்தில் 20 வருடமாக ஆஜராகாமல் இருந்ததால் பழனி நீதிமன்றம் பிடியானை பிறப்பித்தது. காவல் துணை கண்காணிப்பாளர் தனஜெயன் உத்தரவின் பேரில். பழனி தாலுகா ஆய்வாளர் தங்கமுனியசாமி தலைமையில் சார்பு ஆய்வாளர்கள் சந்திரன், அருண்பிரசாத், எஸ் எஸ் ஐ.வேலுமணி காவலர்கள் கார்த்திக், சோலை உள்ளிட்ட போலீசார் பல இடங்களில் தேடி வந்த நிலையில். காவல்துறையினருக்கு ரகசிய தகவலின்படி தேனியில் பதுங்கி இருப்பது தெரிய வந்தது. தேனி மாவட்டத்திற்கு விரைந்து சென்ற காவல்துறை குற்றவாளி கோவிந்தராஜன் பிடிக்க சென்றபோது காவல்துறையினரை பார்த்தவுடன் தப்பிக்க முற்பட்டார்.அப்பொழுது அவரை பிடித்து கைது செய்தனர் பின்பு பழனி தாலுகா காவல் நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டது அதன் பின்னர் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி நீதிமன்ற பிடியானையை நிறைவேற்றினர்..

## பழனியில் களவு நகையை திருப்பி தர மறுத்த வங்கி மேலாளரை அதிரடியாக கைது செய்தது தாலுகா காவல்துறை

திண்டுக்கல், ஜூலை.25-

திண்டுக்கல் மாவட்டம் பழனி தாலுகா காவல் நிலையத்தில் 2023 ஆம் ஆண்டு நெய்க்காரப்பட்டி சேர்ந்த மீராசா கவுண்டர் மகன் குணசேகரன் என்பவர் வீட்டில் பீரோவை உடைத்து 8.1/2 பவுன் தங்க நகை திருடு போய்விட்டதாக புகாரின் அடிப்படையில் தேடப்பட்ட வந்த நிலையில் மானூர் பகுதியைச் சேர்ந்த காமராஜர் மகன் நவீன் குமார் மற்றும் குணசேகரன் என்பது தெரிய வந்தது இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். .மேற்படி வழக்கின் எதிரி நவீன் குமார் மணப்புரம் நிதி நிறுவனத்தில் இரண்டே முக்கால் லட்சத்திற்கு அடகு வைத்ததை ஒப்புக்கொண்ட பின்னரும் மேற்படி நகையை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைக்க



கோரி பலமுறை அழைப்பானை அனுப்பியும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதிகள் வழக்கு விசாரணைக்கு ஒத்துழைக்குமாறு உத்தரவிட்ட பின்னரும்

களவு சொத்து என தெரிந்தும் வைத்திருந்த குற்றத்திற்காகவும் காவல் ஆய்வாளரை இரண்டு ஆண்டுகளாக இவ்வழக்கில் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டிய. அரசு பணியை செய்ய விடாமல் தடுத்த குற்றத்திற்காகவும் பழனி காவல் துணை கண்காணிப்பாளர் தனஜெயன் அதிரடி நடவடிக்கையில் காவல் ஆய்வாளர் தங்கம் முனிசாமி காவலர்கள் பழனி மணப்புரம் பைனான்ஸ் நிறுவனத்தின் தற்போதைய மேலாளர் பிரகாஷ் என்பவர் கைது செய்யப்பட்டு பழனி குற்றவியல் நடுவர் மன்றத்தில் ஆச்சரியப் படுத்தப்பட்டு பழனி கிளைச் சிறையில் அடைக்கப்பட்டார். மேலும் இவ்வக்கில் தலைமறைவாக உள்ள முன்னாள் மேலாளர் மணிகண்டன் என்பவரை பழனி தாலுகா போலீசார் வலை வீசி தேடி வருகின்றனர்





## தாம்பரத்தில் 5வது மண்டலத்தில் உள்ள 64வது வார்டில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்

தாம்பரம், ஜூலை.25-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட 5வது மண்டலத்தில் உள்ள 64வது வார்டில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது.

உங்களுடன் ஸ்டாலின் என்ற திட்டத்தை கடலூர் சிதம்பரத்தில் தமிழக முதலமைச்சர் மு.கஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார் இதில் ஒரு பகுதியாக இந்த முகாமை தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா எம்எல்ஏ அவர்கள் கலந்துகொண்டு முகாமை துவக்கி வைத்து நலதிட்ட உதவிகளை வழங்கினார். உடன் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலச்சந்தர், துணை மேயர் கோ. காமராஜ், பகுதி கழக செயலாளர். மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன், கழக பேச்சாளர் கி.வேலுமணி, மாமன்ற உறுப்பினர் ஷகிலா ஜான்சிமேரி, வட்ட செயலாளர் ரமேஷ் கழக நிர்வாகிகள். லோகேஷ், திவாகர் மற்றும் அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

## அச்சரப்பாக்கம் தின்னலூர் கிராமத்தில் வசித்து வந்த மறைந்த முத்தையா ராமசாமி மற்றும் மனைவி நீலவேணி முத்தையா அவர்களின் 101 பிறந்தநாளில் கிராமத்தில் மரம் நடும் விழா

அச்சரப்பாக்கம், ஜூலை.25-

செங்கல்பட்டு மாவட்டம் அச்சரப்பாக்கம் ஒன்றியத்துக்கு உட்பட்ட தின்னலூர் கிராமத்தில் வசித்து வந்த மறைந்த முத்தையா ராமசாமி மனைவி நீலவேணி முத்தையா அவர்களின் 101 பிறந்தநாளான 21.07.25 அன்று கிராமத்தில் மரம் நடும் விழா சிறப்பாக நடைபெற்றதில் இதனுடன் கிராமத்திலுள்ள குடும்பத்தினர் பணியாளர்கள் உறவுகள் என 450 நபர்களுக்கு ரூபாய் 250 மதிப்புடைய நினைவு பரிசு பொருட்கள் வழங்கியும் விழாவில் கலந்து கொண்டவர்களுக்கும் அறுசுவை உணவும் ரவி முத்தையா குடும்பத்தினர் ஏற்பாட்டில் நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக ஒன்றிய கவுன்சிலர் குடும்பத்தினர், கிராம ஊராட்சி மன்ற தலைவர், துணைத் தலைவர், அரசு பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அனைவராலும் மரக்கன்றுகள் கிராம அரசு பொது இடத்தில் நடப்பட்டு தினமும் தண்ணீர் விட ஊராட்சி நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது.இவ் விழா 21.7.2025 அன்று அரசு பள்ளியில் படிக்கும் 63 மாணவ மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கி பள்ளி மாணவர்களின் கைகளாலும் பள்ளியில் மரக்கன்றுகள் நடப்பட்டதுடன் முந்தைய நாளான 20.07.2025 அன்று மரக்கன்றுகள் ஏற்பாடு செய்த வாலாஜாபாத் விதைகள் அமைப்பின் நிறுவனர் சரண்ராஜ் மற்றும் குழுவினருடன் இணைந்து 123 மரக்கன்றுகள் நடப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து பனை விதைகள் நடுவதற்கான ஏற்பாடு செய்து கொடுத்து ஊராட்சி மன்ற நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது இதனை பராமரிக்க ஊராட்சி நிர்வாகத்திற்கு குடும்பத்தினர் சார்பாக கோரிக்கை வைக்கப்பட்டது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161